காவியளந்தோனுந் தாமிருக்கநாவில்
இழைநக்கிநூனெருடு மேழைபறிவேனோ
குழைநக்கும்பிஞ்ஞகன்றன் கூத்து ௯

ஐயரென்றுரைக்கீர்நாயேற் கதிக்குதமர்வருளிலேனைப்
பொய்யொடுகளவுமற்றுப் புலன்களையொடுக்கிக்கொண்டு
உய்யவேபுலனைகளைந்து புயர்பரவெளியுள்ளாக்கி
வெய்யவன்மதியும்போலே விரவுவரையராவர் ௰

ஞானவானென்றுசொன்னீர் நாதவிந்துங்கடந்து
கானலைவரையுஞ்சுட்டுக் கடுவெளிபரமானந்தந்
தானெனுமவையிரண்டுந் தவிர்ந்துதன்னைச்சமுங்கெட்டு
மோனமுங்கடந்தேயப்பான் முடிந்தவர்ஞானியாவார் ௰௧

சாதியிலேதொண்ணூற்றொன்பானுஞ்சாதி
சமயத்திற்பதின்மூன்றுஞ்சமயமாகும்
நீதியிலேசிவனிடையநீதியாகும்
நிலைமையிலேவேதாந்தநிலைமையாகும்
ஆதியிலேயெங்களூர்கருவூராகும்
அங்கத்திற்போயடைவோம்பேரூர்தன்னிற்
சோதியிலேபாருஞ்சோதிக்கூட்டமாகுஞ்
சொல்லுதற்குமெங்கள்குலஞ்சுக்கிலமதாமே ௰௨

எங்களூரென்றிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச்செய்தி யறியீரோவந்தவூர்
முப்பாழும்பாழாய் முடிவிலொருசூனியமாய்
அப்பாலும்பாழென்றறி ௰௩

இல்லுமில்லென்றுசொன்னீர் நேசபாசங்களைந்தும்
புல்லறிவோடுவாங்கப்புலைகொலைகளவுமற்றுச்
சொல்லுதற்கரியஞானச் சுழுமுனைமுடியின்மீதில்
எல்லையுங்கடந்தேயப்பா லேகமானவர்களிற்பார் ௰௪

இருமிருமென்றுசொன்னீ ரேற்குமோவேழையேற்குத்
தருபொருளுணர்ந்துசைவசமயமுமனைத்துநீங்கி

மருடருவினையுநீங்கி மாசிலாவுண்மைஞானம்
பொருந்தினரிருப்பார்பின்புபொருதவரிறப்பார்தாமே ௰௫

போமெனவுரைத்தீரென்னைப்பொறியொடுபுலன்களைந்தும்
ஆமெனும்விசசையோடுமங்ஙனேமதித்துக்கொண்டே
ஏமமுஞ்சாமமற்றே பிரவொடுபகலுமற்றுச்
சோமனூர்பதியைவிட்டுத்துரந்தவர்போவரன்றே ௰௯

அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாதபாவாய் அடிவருடிப்
பின்றூங்கிமுன்னெழுந்த பேதையேபோதியோ
என்றூங்குமென்கண்ணிரா ௰

ஆகச்செய்யுள்-௨௪௯

மகாகவியாகியகம்பர்

அவ்வவ்வமயங்களிற்கூறியதனிப்பாடற்றிரட்டு

௧

கடல்கிழக்குத்தெற்குக் கரைபொருவெள்ளாறு
குடதிசையிற்கோட்டைக்கரையாம்வடதிசையில்
ஏணாட்டுப்பண்ணை யிருபத்துநாற்காதஞ்
சோணாட்டுக்கெல்லையெனச்சொல

வெள்ளாறதுவடக்கா மேற்குப்பெருவழியாந்
தெள்ளார்புனற்கன்னி தெற்காகும்உள்ளார
ஆண்டகடல்கிழக்கா மைம்பத்தறுகாதம்
பாண்டிநாட்டெல்லைப்பதி ௨

வடக்குத்திசைபழனி வான்கீழ்தென்காசி
குடக்குத்திசைகோழிக் கோடாம்கடற்கரையின்
ஓரமேதெற்காகு முள்ளெண்பதின்காதம்
சேரநாட்டெல்லையெனச்செப்பு ௩

மேற்குப்பவளமலை வேங்கடநேர்வடக்காம்
ஆர்க்குமுவரி யணிகிழக்குபார்க்குளுயர்
தெற்குப்பிநாகி திகழிருபதின்காதம்
நற்றொண்டநாடெனவேநாட்டு ௪

ஆழியான் பள்ளியணையே யவன்கடைந்த
வாழிவரையின் மணித்தாம்பே யாழியான்
பூணேபுரமெரித்த பொற்சிலையிற்பூட்டுகின்ற
நாணேயகல்நட ௫

மங்கையொருபங்கர் மணிமார்பிலாரமே
பொங்குகடல்கடைந்த பொற்கயிறேதிக்களையும்
சீறியதன்மேலூருந் தெய்வத்திருநாணே
ஏறியபண்பேயிறங்கு ௬

பாரைச்சுமந்தபடவரவே பங்கயக்கண்ணன்
வீரங்கிடந்துறங்கு மெல்லணையே ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய் தூரநட ௭

சிரம்பார்த்தானீசனயன் றேவிதனைப்பார்த்தான்
கரம்பார்த்தான்செங்கமலக்கண்ணனுரஞ்சேர்
மலைவெளுத்ததிண்புயத்து வண்ணாஞ்சிராமன
கலைவெளுத்தநேர்த்திதனைக்கண்டு ௮

ஆரார்தலைவணங்கா ராரார்தான்கையெடார்
ஆரார்தான்சத்திரத்தி லாறாதார்சீராருந்
தென்புலியூர்கமவுஞ் சிவனருள்சேரம்பட்டத்
தம்புரான்வாசலிலேதான ௯

கொற்கையாளமாறன் குலசேகரப்பெருமான்
பொற்கையானைகதை போதாதேநற்கமல
மன்றலேவாவி மணிவாசலையசைக்கத்
தென்றலேயேன் வந்தாய்செப்பு ௰

பேரரசர்தேவிமார் பெற்றமதலையர்தம்
மார்பகலங்கண்டு மகிழ்வரேபோர்புரிய
வல்லான்களங்கன் வர்ணன்றிருநாமம்
எல்லாமெழுதலாமென்று ௰௧

உலைக்குரியபண்ட மூவக்கிரக்கச்சென்றால்
கொலைக்குரியவேழங் கொடுத்தான்றலைக்குரிய
வாணர்கோனுறை மகதேவனுக்கிந்தப்
யாணனேறென்னபகை ௰௨

வர்ணன்பெயரெழுகா மார்புண்டோயாதர்காண்
வாணன்புகழுரையாவாயுண்டோ வாணன்
கொடிதாங்கிநில்லாத கொம்புண்டோவுண்டோ
அடிதாங்கிநில்லா வரசு ௰௩

உமையவளுநீயு மொருங்கொப்பேயொப்பே
உமையவளுக்குண்டங்கோருணம்உமையவடன்
பாகந்தோயந்தாண்டசன்பலிக்குழன்றான்பாண்டியனின்
ஆகந்தோய்ந்தாண்டானரசு ௰௪

மோட்டெருமைவாவிபுக முட்டுவரால்கன்றென்று
விட்டளவும்பால்சொரியும்வெண்ணெயோநாட்டில்
அடையாநெடுங்கதவு மஞ்சலென்றசொல்லும்
உடையான்சடையப்பனூர் ௰௫

வெற்றிபுனைதாதகிக்கும் வேம்புக்கும்பெண்ணைக்கும்
சுற்றும்பெருநிழலாமத் தோன்றுமேகற்றோர்
இறந்தாங்குந்தாங்குஞ் செகமுழுதுந்தாங்கும்
அறந்தாங்குந்தொண்டவரசு ௰௬

கந்தமலர்ப்பிரமன் கன்னிமடவார்க்கெல்லாம்
அந்தவிளநீரைமுலையாக்கினான்சுந்தரஞ்சேர்
தோற்றமிதுவல்லிக்குத் தோப்பைமுலையாக்கினான்
ஏற்றமிதில்யார்தாரியம்பு ௰௭

இருந்தவளைப்போனவளை யென்னையவளை
பொருந்தவளைபறித்துப்போனான்பெருந்தவளை
பூத்தக்கததேன்சொரியும் பொன்னிவளநன்னாட்டின்
மாத்தத்தன்வீதியினில்வந்து ௰௮

ஆழியானாழியயனெழுத்தாணியென்பார்
கோழியான்குன்றெறிய வேலென்பான்பூமியான்
அங்கைமெழுகென்பா னருள்பெரியமாவண்சேர்ச்
சிங்கனுலைக்களத்திற்சென்று ௰௯

குடகர்குணகட லென்பர்குடக
இடகர்வடகடலென்பர் வடகடலோர்
தென்கடலென்பா திருந்துதாரச்சுதனின்
முன்கடைநின்றார்ககுமரசு ௨௰

தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெ
றனைவிளைத்தார் முற்றமது தானுங்கனையு
முரசுணங்கச்சங்குணங்கு மூரிதேர்த்தானை
அரவிணங்குமச்சுதன் முற்றம் உக

குறையுளாரெங்கிரார் கூர்வேலிராம
விறையாறுதிங்க ளிருந்தான் முறைமையான்
ஆலிக்குந்தார்மார்பா வச்சுதவன்னுளில்
வாலிக்கிளையான்கடை உஉ

அரசனகளங்க னச்சுதன முற்றத்
தரசரவதரித்தவர்நாள் முரசதிரக்
கொட்டிவிடுமோசையினுவ கோவிந்தர்காற்றளையை
வெட்டிவிடுமோவசையிரும் உங

தளையவிழ்காண்மாலைத் தாயரேயாவி
களையினுமெனகண்டிரகது காட்டேன்வளைகொடுபோம்
வனகண்ணனமாவிலசயன மால்யானைதனனெடும்வந்
தெனகண்புகுந்தானினி உச

பாண்டியனைபபேர்மாற்றிப் பாணர்க்கரசளித்த
வாண்டகையென்றுனை யறியேனேமுண்டெழுந்த
கார்மாற்றுஞ்செங்கைக் கடகரிவாணாவுனது
பேர்மாற்றுவதோபேசு உரு

வாட்டானைத்தென்னவர்கோன மாகதற்குத்தோற்றசெய்தி
கேட்டானத்திங்குரலும் கேட்டதற்குனட்டம்
பொருந்தாயிரவிழியான பொனமுடியைச்சாய்த்தன்
இருந்தானிங்கெனனுகுமெனது உசா

பாணனமதுரைப் பதியாளவைத்தபிரான
வர்ணர்புகழவரு மேகம்பர்வாணன
கரும்போதகமேகின கால்பணிவேனமீண்டே
வரும்போதகமேவரின உஎ

படுபருந்துஞ்சூர்ப்பேயும் பனமிருகஞ்செனனாய்
கொடுகழுகுமித்தனையுங் கூடிவடிவுடைய
கோமானகளப்பாளன கொள்யானைபோமாறு
போமாறுயோமாறுபோம் உஅ

மற்கொண்டதிண்புயத்தான் மாநகர்விட்டிங்குவந்து
சொற்கொண்டபாவின் சுவையறிவாரிங்கிலையே
விற்கொண்டவாணுதலாள் வேலிதருங்கூலி
நெற்கொண்டுபோமளவு நில்லாய்நெடுஞ்சுவரே. ௪௪

விருத்தம்.

தேரையாற்செவ்விளநீ ருண்ணுப்பழிசுமப்பார்
நாறியார்தாமறிவார் நாமவரைநத்தாமை
கோரைவாய்ப்பொன்சொரியுங் கொல்லிமலைநன்னாடா
ஊரைவாய்மூட வுலைமூடிதானிலையே. ௪௫

மட்டுப்படாக்கொங்கை மானார்கலவிமயக்கத்திலே
கட்டுப்பட்டாயென்ன காதல்பெற்றாய்-மதன்கையம்பினாற்
பட்டுப்பட்டாயினுந் தேருவையேயென்று பார்த்திருந்தேன்
வெட்டுப்பட்டாய்மகனே தலைநாளின்விதிப்படியே. ௪௬

வில்லம்புசொல்லம்பு மேதினியிலிரண்டுண்டு
வில்லம்பிற்சொல்லம்பே மேலதிகம்-வில்லம்பு
பட்டதடாவென்மார்பிற் பாண்டியாநின்குலத்தைச்
சுட்டதடாவென்வாயிற் சொல். ௪௭

கரைக்குவடக்கிருக்குங் காளிகாளம்மைக்
கரைந்துவழிசாரதைத் தொட்டப்போய்-உரைத்தும்
மறைக்கவழியறியாத வன்பேயின்கையைக்
குறைக்குமாங் கூன்கத்திகொண்டு. ௪௮

காலப்புயனிகர் காராளர்தம்மைக்கடலுடுத்த
தாலக்குலமங்கைபெற்றதனாற் சதாகாலமுமால்
கோலத்திருமுகத்தாலே முகந்தனன்கூடலிலே
சூலக்கரப்படையான் றலைமீதுசுமந்தனனே. ௪௯

கல்லங்காடுதனில்விளையாகக் கடுகநிலத்திற்றான்முளையா
அல்லனிருந்தகருங்கூந்த லணங்குக்கணங்குபோலாவாள்
செல்லன்றேவிமனைகடொறுந் தேடித்திரிந்துங்காணாத
நெல்லஞ்சோறேகமபஞ் சோற்றினைநீசுமந்துதிரிவாயே. ௫௰

கம்பர்கற்றுச்சொல்லி.

மாவுறங்கினபுள்ளுறங்கின வண்டுறங்கினதண்டலைக்
காவுறங்கினவெண்கண்மாவிரு கண்ணுறங்கிள்ளையகோ
கோவுரங்குகடைத்தலைக்குல தீபவெள்ளைக்குதட்டிவாய்
ஆவுறங்குபசாரசஞ்சல மஞ்சலென்னவடுக்குமே. ௫௧

அம்பிகாபதியும் கம்பரும்பாடியது.

இட்டடிநோவ வெடுத்தடிகொப்பளிக்க
வட்டில்சுமந்து மருங்கசையக்-கொட்டிக்
கிழங்கோகிழங்கென்று கூறுவாணாவில்
வழங்கோசைவையம் பெறும். ௫

அம்பிகாபதி.

சற்றேபருத்த தனமேகுலுங்கத்தரளவடந்
துற்றேயசையக்குழையூசலாடத் துவர்கொள்செவ்வாய்
நற்றேனொழுகநடனசிங்காரநடையழகி
பொற்றேரிருக்கத் தலையலங்காரம்புறப்பட்டதே. ௫

வெங்கண்சிவந்து வெடிவான்முறுக்கி வெகுண்டெழுந்தெள
அங்கம்பிளக்கவுநங்களிறே யன்றிரணியனைப்
பங்கம்படவாங்கிண்டே யுகிரம்பருகுநர
சிங்கமிருக்குதுகாண் கெடுவாயென்றன்சிந்தையிலே. ௫

வீரமுண்டோமதன்கையம்பினால் வெந்துவிழுகைக்கு
நேரமுண்டோவஞ்சிநேர்பட்ட காலையினெஞ்சைவிடப்
பேரமுண்டோசொல்லொண்ணாத காமப்பெருநெருப்புக்
கீரமுண்டோவையனேயென்ன பாவமினிச்சொல்வதே. ௫

உருகியுடல்கருகி யுள்ளீரல்பற்றி
எரிவதவியாதென் செய்வேன்-வரியதவ
நஞ்சிலேதோய்ந்த நளினவிழிப்பெண்பெருமாள்
நெஞ்சிலேயிட்ட நெருப்பு. ௫

வாணன்புகழ்க்கெல்லை வாழ்த்துவோர்நாவெல்லை
வாணன்புகழ்க்கெல்லை மண்ணெல்லை-வாணன
படைக்கெல்லைதிக்கெல்லை பைந்தமிழ்தேர்வாணன்
கொடைக்கெல்லையேற்பவர்தங் கோள். ௫

கில்லாதபல்லும்பறிபட்டகூந்தலுநீண்டகரிப்
பொல்லாதவருக்கும் புடவையுமாய்வெகுபூச்சியம்போய்ச்
செல்லாப்பணத்துக்குத் தேட்பிணுமற்றுத்தியங்கியென்றும்
இல்லாதபரிவிதனக்கார்துணைபொன் னிராட்டினமே. ௫௬

வாசமலர்மடந்தை போல்வார்மருதவனத்
தீசனடியா ரெழுபதின்மர்-நேசத்

இரவலர்மேனீட்டுவேர்கை யின்புலவையாளும்
புரவலர்மேனீட்டுவர் பொற்றாள். ௯௯

இடைக்காட்டார்பாடியவசைமுறி.

ஆற்றங்கரையி னருகிருக்குமாமரத்திற்
காக்கையிருந்து கஃகுகஃகெனக்-காக்கைதனை
எய்யக்கோலில்லாமல் இச்சிச்செனவெய்தான்
வையக்கோனாரின் மகன். ௱

ஏகம்பவாணன்மனைவி.

சேனைதலையாக்கிச் செங்குருதிநீர்தேக்கி
ஆனைமிதித்த வருஞ்சேற்றின் மானபரன்
பாவேந்தர்வேந்தன் பரித்துகட்டாலேகம்பன்
மூவேந்தர்தங்கள் முடி. ௱௧

கம்பர்விட்ட வெள்ளாட்டி.

நெற்படிவிளைகழனிபுடைசூழ்தென்மலிவாழ்தச்சன்
கற்படிபனைதோணான்பெயரோ கக்கணாகணாகணாவன்
விற்படிவாளுதலாண்மனைவி மின்மினிமினிமினிமி
சொற்படிவேலைசெயும் மவளோர் தூந்தூமிதூரிதூரிதி. ௱௨

வட்டமதிபோலிருக்கும் வன்னிக்கொடிதாவுங்
கொட்டுவாரைகையினின்று கூத்தாடும்-சுட்டால்
அரகராவென்னுமே யம்பலசோமாசி
ஒருநாள்விட்டேனீ துரை. ௱௩

தென்னவாகேளவ சிவிலிமாறுமதுரை
மன்னவாபாண்டி வரராமா-நின்னுஞ்
சுரும்புக்குத்தாரளித்த துய்யதமிழ்நாடா
கரும்புக்குவேம்பிலே கண். ௱௪

மார்ப்பைந்தார்க்கல்லமுத்து வண்ணத்தார்க்கல்லவஞ்சி
வேப்பந்தார்க்காசைகொண்டு விட்டாளே-பூப்பைந்தா
சேர்ந்திருக்குநெல்வேலிச் சிவிலிமாறுதமிழை
ஆய்ந்திருக்கும்வீர மாறு. ௱௫

வேம்பாகிலுமினிய சொல்லுக்குநீபுனைந்த
வேம்பாகிலுமுதவ வேண்டாமோ-மீன்பாயும்

வேலையிலேவேலைவைத்த மீனவாநின்புயத்து
மாலையிலேமாலைவைத்தாள் யான். ௬௬

இலகுபுகழாரை யேகம்பவாணன்
அலகைகவருமவருமென் றஞ்சி-உலகறிய
வானவர்கோன்சென்னிமிசை வண்கைவளையெறிந்த
மீனவர்கோன்கைவிடான்-வேட்பு. ௬௭

பாண்டியன்மனைவி.

வேண்டியபோதின்பம் விருப்புமடநகையாரைத்
தீண்டியகையாலென்னைத் தீண்டாதே-பாண்டியா
முல்லைக்கதியா முகம்பார்த்தகலநின்று
சொல்லக்கடவதெல்லாஞ் சொல். ௬௮

கலையான்முலைமுடிக் கண்வலைக்குள்ளாக்கும்
விலைமாதர்தாம்வர விட்டாரோ-விலைமாதர்
கொங்கையிலேதோய்ந்த குறைநீரத்துய்யசிவ
கங்கையிலேநீராடிவா. ௬௯

ஆக-செய்யுள் ௬௰௯.

இலக்கணக்கவிகளாகிய
ஒட்டக்கூத்தருப்புகழேந்திப்புலவரும்
அவ்வவ்வமயங்களிற்கூறியதனிப்பாடற்றிரட்டு.

கலைவாணிநீயுலகிலிருப்பதுவுங்கல்விவல்லோரைத்
தலையாகக்காப்பதுவுமவர்நாவில்வாழ்வதுவுஞ்சத்தியமேயன்றோ
சிலைவாணனுமிருந்தாயிரமபுயங்கடுணிந்துமுயர்சிவனுற்றான்
தலையாவிகொடுத்திடுஞ்செங்குந்தருயிர்பெற்றிடநீதயைசெய்வாயே.

நிலைதந்தாருலகினுக்குமியவருக்குமானமதைநிலைக்கத்தந்தார்
கலைதந்தார்வணிகருக்குச்சிவனஞ்செய்திடவென்றேனையிற்றந்தார்
விலைதந்தார்தமிழினுக்குச்செங்குந்தரென்கவிக்கேவிலையாகத்தான்
தலைதந்தாரெனக்குமொட்டக்கூத்தனெனப்பெயரினையுந்தாந்தந்தார்

பத்திக்கொண்டதிக்கும் பதரிப்போயலயப்
பைம்பொற்றரைகைசிந்தப் பகிரண்டத்திடைநீள்
மத்துக்கொண்டுமதிக்குந் திரையாழிகெடுமால்
வடிவாகிப்புவிகைக்கொண் டருண்மானுபரா
முத்துப்பந்தரினிற்குங் குருளைக்குஞ்சினவேள்
முருகற்கும்பொதியைக்கோ முனிவற்குஞ்சடிலக்

கொத்தற்கும்பதுமக்கொந்தயனுக்குமலதிக்
கூழைத்தண்டமிழுக்கேன் கொடியுங்காளமுமே. ௩

இன்றல்லோகம்பனிறந்தநாளென்கவிதை
இன்றல்லோராசசபைக கேற்குநாள்-இன்றல்லோ
பூமடந்தைவாழப் புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூல்வாங்கு நாள். ௪

இன்றல்லோகம்ப னெழுந்தநாளென்கவிதை
இன்றல்லோராசசபைக் கேறுநாள்-இன்றல்லோ
பூமடந்தைவாழைப் புவிமடந்தைவீற்றிருக்க
நாமடந்தைநூல்பூட்டு நாள். ௫

கட்டளைக்கலித்துறை.

மாங்குயிலாள்வில்லிதன்னம்பினாற்காம்பவாரிதியால்
ஓங்கியபூமெல்லணையொன்றினுலும்பர்மதியாற்
றீங்குறுமோநல்லெழில்குன்றுமோகொமபுசீர்கெடுமோ
காங்கேயனேசொல்லகளங்கனேகம்பைக்காவலனே. ௬

காண்டகண்டத்தொளிக்கஞ்சியமான்கருங்கங்குலிலே
திரண்டவெள்ளத்திற்பிணைமீதுசென்றனள்சேர்ந்தவனை
அரண்டவின்பங்கொடுமீளக்கராம்பற்றலங்கொலுசால்
குரண்டகன்னத்திலுதைத்தனள்காணங்குலோத்துங்கனே. ௭

சோரத்துக்கொப்போ கனவட்டமம்மானை
கூறுவதுங்காவிரிக்கு வைகையோவம்மானை
ஆருக்குவேம்புநிகராகுமோவம்மானை
ஆதித்தனுக்குநிகரமபுலியோவம்மானை
வீரர்க்குள்வீரனொரு மீனவனோவம்மானை
வெற்றிப்புலிக்கொடிக்கு மீன்கொடியோவம்மானை
ஊருக்குறையூர்நிகர் கொற்கையோவம்மானை
ஒக்குமோசோணாட்டுக்குப் பாண்டியநாடம்மானை. ௮

புகழேந்தி.

திருநெடுமாலவதாரஞ் சிறுபுலியோவம்மானை
சிவன்முடியிலேறுவதுஞ் செங்கதிரோவம்மானை
ஒருமுனிவனேரியிலோ வுரைதெளிந்ததம்மானை
ஒப்பரியதிருவிளையாட் டுறைந்ததையிலோவம்மானை
கரையெதிரேட்டேறியது காவிரியோவம்மானை
கடிப்பகைக்குத்தாக்கியங் கண்ணியோவம்மானை

பாவைபடிந்ததுஞ்சோழன் பந்தனிலோவம்மானை
பாண்டியனார்பராக்கிரமம் பகரொளியோவம்மானை. ௯

ஒட்டக்கூத்தனும் சோழராசனும்பாடியது.

ஆடுங்கடைமணிநாவசையாமலகிலமெங்கும்
நீடுங்குடையைத்தரித்தபிரானிந்தநீணிலத்தில்
பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்கசோழனென்றேயெனைச்சொல்லுவரே. ௰

ஒட்டக்கூத்தன்.

இன்னங்கலிங்கத் திகல்வேந்தருண்டென்றோ
தென்னன்றமிழ்நாட்டைச் சீறியோ-சென்னி
அகளங்காவுன்ற னயிராவதத்தின்
நிகளங்கால்விட்ட நினைவு. ௰௧

புகழேந்தி.

தென்னவன்றென்னர் பெருமான்றிறன்மதுரை
மன்னவன்கோக்களிற்றின் வலிக்கும்-பொன்னிநா
டாலிக்கும்வேந்தா மபயகுலன்மகளிர்
தாலிக்குமொன்றே தளை. ௰௨

புகழேந்தி.

சத்தம்பயிலும்புலவோர்கதவித்தண்டோட்டம்பகும்
பித்தனிவனென்பரென்னைக்கண்டார்பெருத்தும்பணைத்துத்
தத்தம்பிறகிடும்பார்வேந்தர்தங்கட்டமகுட
சத்தம்பசத்தங்காண்கங்குல்யானைச்சயதுங்கனே. ௰௩

ஒட்டக்கூத்தன்.

மாணிற்குமோவிந்தவாளறிவேங்கைமுன்வற்றிச்செத்த
காணிற்குமோவிவ்வெரியுந்தணன்முன்மனைகடலின்
மீனிற்குமோவிந்தவெங்கணன்சுறுமுனம்வீசுபனி
தானிற்குமோவிக்கதிரவன்றோற்றத்திற்றூர்மனனனே. ௰௪

புகழேந்தி.

மானவனாந்தவாளரிவேங்கைமுன்வற்றிச்செத்த
கானவனைவ்வெரியுந்தணன்முன்கனைகடலின்
மீனவனனந்தவெங்கண்சுறுமுனம்வீசுபனி
தானவனனக்கதிரவன்றோற்றநற்றூர்மன்னனே. ௰௫

ஒட்டக்கூத்தன்.

கானேயினியுனைவேண்டுவதில்லைகளினமலர்த்
தேனேகபாடந்திறந்திடுவாய்திறவாவிடிலோ
வானேறனையவீரவிகுலாதிபன்வாயில்வந்தாற்
றானேதிறக்குநின்கையிதழாகியதாமரையே. ௰௬

புகழேந்தி.

இழையொன்றிரண்டுவகிர்செய்தநுண்ணிடையேந்துவள்ளக்
குழையொன்றிரண்டுவிழியணங்கேகொண்டகோபந்தணி
மழையொன்றிரண்டுகைமானாபரணனின்வாயிலவந்தாற்
பிழையொன்றிரண்டுபொறாரோகுடியிற்பிறந்தவரே. ௰௭

ஒட்டக்கூத்தன்.

வெள்ளத்தடங்காச்சினவாளைவேலிக்கமுகின்மீதேறித்
துள்ளிமுகிலைக்கிழித்துமழைத்துளியோடிறங்குஞ்சோணாடா
கள்ளக்குறும்பர்குலமறுத்த கண்டாவண்டர்கோபாலா
பிள்ளைமதிகண்டம்பேதை பெரியமதியுமிழந்தாளே. ௰௮

ஔவையார்.

ஒட்டாவொருமதிகெட்டாய்

புகழேந்தி.

பங்கப்பழனத்துழுமுழவர் பலவின்கனியைப்பறித்ததென்று
சங்கிட்டெறியக்குரங்கிளநீர் தனைக்கொண்டெறியுந்தமிழ்நாடா
கொங்கைச்சமராபதியளித்த சோதோராசகுலதிலகா [லே
வெங்கட்பிறைக்குங்கருப்பிறைக்கும் மெலிந்தம்பிறைக்கும்விழிவே

ஒட்டக்கூத்தன்.

புள்ளிருக்குந்தார்மார்பன் பூம்புகார்வாழ்களியோம்
கள்ளிருக்குங்களையுண்டுஞ் சோர்விலேம்-உள்ளபடி
சொல்லவரவாலி துரோபதையைமூக்கரித்த
தல்லவாமாபாரதம் (வாலி-அரவக்கொடியையுடைய துரியோதனன்)

என்றுபெறுவேன்யா னீசன்றிருமுடிமேல்
சென்றுவிளையாடுகின்ற தீபமே-என்றும
செருப்புக்குத்தோல்வாங்குஞ் சென்னியகளங்கன்
பொருப்புக்குத்தோலாப் புயம். தோல்-யானை. ௨௧

வேளாளன்.

கோக்கண்டுமன்னர் குரைகடற்புக்கிலாகோகனகப்
பூக்கண்டுகொட்டியும் பூவாதொழிந்திலபூமுழுதும்

காக்கின்றமன்னகவியொட்டக்கூத்தனின்கட்டுரையாம்
பாக்கொண்டொளிப்பார்களோ தமிழ்பாடியபாவலரே. ௨௨

கருமான்.

செல்லன்புதல்வன்றிருவேங்கடவன்செகத்குருவாங்
கொல்லனகவியைக்குறைசொல்லுவோரைக்குரடுகொண்டு
பல்லைப்பிடுங்கிப்பருந்தாட்டமாட்டிப்பகைவர்முன்னே
அல்லும்பகலுமடிப்பேன்கவியிருப்பாணிகொண்டே. ௨௩

அம்பட்டன்.

விண்பட்டகொக்கென வெல்லும்வல்லூரின்விலவிலத்து
புண்பட்டநெஞ்சொடுமிங்குநின்றாய்பொட்டையாய்புகலாய்
கண்பொட்டையாயினுமம்பட்டனுன்கவிவாணர்முன்னே
பண்பட்டசெந்தமிழ்நீயுந் திடுக்கிடப்பாடுவனே. ௨௪

குயவன்.

மோனைமுத்தமிழ் மும்மதமும்பொழி
யானைமுன்வந் தெதிர்த்தவனாடா
கூனையுங்குடமுங் குண்டுகிட்டியும்
பானையும்வனையுங்குசப் பயல்யான். ௨௫

தச்சன்.

சொன்னசந்தக்கவியாவருஞ் சொல்லுவர்சொற்சுவைசேர்
இன்னசந்தக்கவியே தென்றபோதிலெதிர்த்தவரை
வன்னசந்தஞ்செடவாயைக்கிழித்திந்தவாச்சியினாற்
கன்னசந்தங்களினிக்கவியாப்பைக் கடாவுவனே. ௨௬

தட்டான்.

திகிரிவட்டக்குடைச்செங் கோல்பயன்செழுஞ்சிலம்பிற்
பகுதியொட்டைக்கூட்டபத்தனோ ணப்பணைக்கவியின்
மிகுதவொட்டத்தட்டிவிட்டகை யோட்டிலுருக்கிக்குத்திப்
புகுதவொட்டித்தட்டிமேலனுகாவண்ணம்போர்செய்வனே. ௨௭

ஒட்டக்கூத்தனும் புகழேந்தியும்.

வென்றிவளவன் விறல்வேந்தர்தம்பிரான்
என்றுமுதுகிக் கிடான்கவசம்-துன்றும்
வெறியார்தொடைகமழு மீனவர்கோன்கைவேல்
எறியான்புறங்கொடுக்கி னென்று. ௨௮

பழியும்புகழுமெவர்க்குமுண்டா மிந்தப்பாரிலுனக்
கழிவுஞ்சிலையுங்கயலுமென்றால் களங்கதுங்கா

பொழியும்பொழுதெங்கள் பெண்சக்ரவர்த்திமுகத்திரண்டு
விழியும்புருவமுமாகியந்தோ வுனைவெல்கின்றதே. ௨௬

திக்குகளெட்டுக்கயர்துக்க முற்றுத்திடுக்கிட்டலா
மைக்கடற்குட்சரந்தைக்கவிட்டோர்க்கிடமாமதுர
இக்குமுற்றிக்கணுச்சற்றுவிட்டுத் தெறித்திட்டமுத்தைக்
கொக்குமொக்கிவிக்கிக் கக்குமச்சோலைக்குறுங்குடியே. ௩௰

ஆகச்செய்யுள்-௩௪௫.

கவிவீரராகவமுதலியார்.

தேன்பொழிந்தவாயான் றிருவேங்கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணைக் கினியானே-வான்சிறந்த
சீதேவியாருடனே செய்யதிருப்பாற்கடலில்
மூதேவியேன்பிறந்தாள் முன். ௧

இம்பர்வானெல்லை யிராமனையேபாடி
யேன்கொணர்ந்தாய்பாணநீ யென்றாள்பாணி
வம்பதாங்களபமென்றேன் பூசுமென்றாள்
மாதங்கமென்றேயாம் வாழ்ந்தோமென்றாள்
பம்புசீர்வேழமென்றேன் றின்னுமென்றாள்
பகடென்றேனுழுமென்றாள் பழனந்தன்னைக்
கம்பமாவென்றேனற் களியாமென்றாள்
கைம்மாவெனறேன்சும்மா கலங்கினாளே. ௨

இல்லெனுஞ்சொல்லறியாதசிங்கையில்வாழ்ந்தா னனைப்போல்யாழ்ப்பாணன்யான், பல்லைவிரித்திருந்தக்கால்வெண்சோறும்பழந்தூசுமபலியாமற், கொல்லவினைத்தேதனது நால்வாயைப்பரிசென்றுகொடுத்தான்பார்க்குள், தொல்லையெனதொருவாய்க்கும் நால்வாய்க்கு மினாயெங்கே துரப்புவேனே. ௩

முன்னாளிருவர்க்கும் யாக்கையொன்றாகமுயங்கினமால்
பின்னாட்பிரியன்விரியையென்றாயினம் பேசனுற்றம்
இந்நாட்கொழுநன்மனை யென்றாயினமின்னமுமேழோர்
சின்னாளிலெப்படியோ வையநீயின்றுசெப்புகவே ௪

வாழுமிலங்கைக்கோ மானில்லைமானில்லை
ஏழுமராமரமோ விங்கில்லை ஆழி

அலையடைத்தசெங்கை யபிராமாவின்று
சிலையெடுத்தவாறெமக்குச் செப்பு. ௫

செஞ்சுடரின்மைந்தனையுந் தென்னிலங்கைவேந்தனையும்
பஞ்சவரிற்பார்த்தனையும்பாராதே-விஞ்சு
விரதமேபூண்டிந்த மேதினியையாண்ட
பரதனையுமராமனையும் பார். ௬

வடவைக்கனலைப்பிழிந்துகொண்டு மற்றுமொருகால்வடித்தெடுத்து
வாடைத்துருத்திவைத்தூதி மறுகக்காய்ச்சிக்குழம்புசெய்து
புடவிக்கயவர்தமைப்பாடிப் பரிசுபெறுமற்றிருமபிவரும் [ளோ
புலவர்மனம்போனெருப்பைப் புகழுகென்றிறைத்தாற்பொருப்பா
அடவிக்கதலிப்பசுங்குருத்தை நச்சுக்குழலென்றஞ்சியஞ்சி
அஞ்சொற்கிளிகள்பஞ்சரம்விட் டகலாதிற்குமகளங்கா
திடமுக்கடவாரணமுகைத்த தேவேதேவசிங்கமே
திக்குவிசயஞ்செலுத்திவரு செங்கோனடாத்துமெங்கோனே. ௭

மாதரணிமென்முலைதோய் மாராசிதம்பரபூ
மாதரணிராசர்மகிழ் மாவசன-மாதா
மறுகிடத்தேயம்பொன் மட.வார்பழிக்கநெஞ்ச
மறுகிடத்தேங்குந் துணைப்பெண்வா ௮

சொல்லுமல்லும்பகலுஞ் சோறுகிடைகிடக்கும்
கல்லுமுருகக் கனிந்தாற்றும்-புல்லிணைய
விண்கலக்குங்கீர்த்தி வேள்சிதம்பரக்குமுறு
பெண்கலக்கங்கொண்டுநின்றனன் பேர். ௯

வந்தனந்தமென்பூ மணந்தோய்ந்துபாயப்பா
வந்தனம்விம்பிச்சோர்தாள் வாகோடி-வந்தனங்கள்
அன்னயனங்கொள்ளாம லாள்சிதம்பரக்குமுறு
அன்னமனங்கொண்டுய்வே யாங்கு. ௰

மாவாரிமுத்தவெண்பன் மாதுமயலைத்தணிசேர்
மாவாரிமுத்தளித்த வைபோகா-மாவுச்
சிதம்பரனவயாநீ திக்குளுயர்பூமா
சிதம்பரவையாநீ திக்கு. ௧௧

பங்கஜன்மேன்மேவியசௌ பாக்கியசுபமானளித்த
அங்கஜவேள்வெங்கணையா லாவிநொந்தளங்களிட
ம[illegible]ராஞ்சிதம்பரவு மாதினையாள்கோடிநமஸ்
[illegible]ராஞ்சிதம்பரபோ கா. ௧௨

இன்னங்கலைமகள்கைமீதிற் புத்தகமேந்தியந்தப்
பொன்னம்பலந்தனிற் புக்கிருந்தாளென்னபுண்ணியமோ
கன்னன்களந்தைக் கவிவீரராகவன்கச்சியிலே
தன்னெஞ்சமேடெனக் சற்றொன்றுமுருத்தமிழையுமோ. ௧௩

முன்னாட்டுத்தவமுனியுஞ்சேடனும்வான்மீகனும்முன்னில்லாமற்
றென்னாட்டுமலையிடத்தும் பாரிடத்தும்புற்றிடத்துஞ் சென்றுசேர்ந்
தார், இந்நாட்டுப்புலவருனக் கெதிரில்லையேகவிவீரராகவாநீ
பொன்னாட்டுப்புலவருடன் வாதுசெய்யப்போயினையேபுகலுவாயே.

கோளரவேந்துகிலிந்தப்புதுமையுண்டோவெனமொழிந்தகுமுறுகே
ண், யாளரைவந்தமைத்தோய்ந்த கற்புடையபாஞ்சாலியணை தவிமன்
வாளரிபோலருகிருக்கமலயவெற்பிலிருந்துவந்தமாமனுரைச்
சாளரவாசலைத்திறந்துவரவழைத்துமுலையாரத்தழுவினளே. ௰௫

பணியாரரிதோசையிலக்கொங்கை தோய்ந்திடப்பார்ப்பர்பல்வி
ப்ணியாரந்தோசையிலாச்செந்துவர்வாய்ப்பிறப்பார்களென்றே
பணியாரந்தோசைமுன்னோனுக்கிட்டேத்திப்பழனிச்செவ்வேள்
பணியாரந்தோசைவராகாரனோர்க்கென்னபாவமிதே. ௰௬

வீரஞ்சொரிகின்றபிள்ளாயுனக்குப்பெண்வேண்டுமென்றால்
ஆருங்கொடாருங்களப்பன்கபாலியம்மான்றிருடன்
ஊருஞ்செங்காடுநின்றன்முகம்யானையுனக்கிளையோன்
பேருங்கடம்பனுன்றாய்நீலியுனக்கும்பெருவயிறே. ௰௭

கட்டிச்சோற்றைப்பறிகொடுத்தபோது பாடியது.

சீராடையற்றவைரவன்வாகனஞ்சேரவந்து
பாராருநான்முகன்வாகனந்தன்னைமுன்பற்றிக்கௌவி
நாராயணனுயர்வாகனமாயிற்றுநம்மைமுகா
பாரான்மைவாகனன்வந்தேவயிற்றினிற்பற்றினனே. ௰௮

மைவாகனன்-அக்கினிதேவன்.

பாண்டியன்மாலைகண்டாய் மகளேசினைப்பார்த்தவற்கு
வேண்டியவின்பமிகவருமோ வெண்ணெயேதிருடித்
தாண்டிக்குதித்தனற் கோதண்டராமன்றடவரைமேல்
ஆண்டியிருப்பிடத் தாதனிருப்பிடமானபின்னே. ௰௯

சோனையுங்காத்துநல்லானையுங்காத்துத்துரோபதைதன்
தானையுங்காத்தடைந்தானையுங்காத்துத்தடத்தகலி
மானையுங்காத்தனுமானையுங்காத்துமடுவில்விழும்
ஆனையுங்காத்தவனே யெனைக்காப்பதரிதல்லவே. ௨௰

பொய்யருக்குப்பொய்யுரைத்தால வெற்றியாமவருக்குப் பொய்யாகாத, மெய்யருக்குப்பொய்புரைத்தாற் றேய்பிறைபோற்றவங்குறையு மிடியுண்டாகும், துய்யதாய்தந்தையர்க்குப்பொய்யுரைத்தால் வருமைபிணிதொலையாவெய்துமம, உய்யவருடேசிகர்க்குப்பொய்யுரைத்தானரகமதுவுண்மைதானே. ௨௧

ஆகச்செய்யுள்-௩௬௬.

படிக்காசுத்தம்பிரான்.

அடகெடுவாய்பலதொழிலுமிருக்கக்கல்வி
யதிகமென்றேகற்றுவிட்டோமறிவில்லாமல்
இடமுளமோகனமாடக்கழைக்கூத்தாடச்
செப்பிடுவித்தைகளாடத்தெரிந்தோமில்லைத்
தடமுலைவேசையராகப்பிறந்தோமில்லைச்
சனியானதமிழைவிட்டுத்தையலார்தம்
இடமிருந்துகுற்றேவல்செய்தோமில்லை
என்னசென்மமெடுத்துலகிலிரக்கின்றோமே. ௧

பெற்றொருபிள்ளை யென்மனையாட்டியப்பிள்ளைக்குப்பால்
பற்றுதுகஞ்சிகுடிக்கத்தரமல்லபாவிரக்கச்
சிற்றுணுமில்லையிவ் வெல்லாவருத்தமுந்தீரவொரு
கற்றுதரவல்லையா வல்லைமானகர்காளத்தியே. ௨

வழிமேல்விழிவைத்துவாடாமலென்மனையாளுமற்றோர்
பழியாமற்பிள்ளையும்பாலென்றழாமற்பகிரெனுஞ்சொல்
மொழியாமலென்னைவரவிட்டபாவிமுசித்துச்சதை
கழியாமலாவளித்தாய்வல்லமாநகர்காளத்தியே. ௩

சீதக்காதிபேரில்.

ஓர்தட்டிலேபொன்னு மோர்தட்டிலேநெல்லுமொக்கவிற்குங்
கார்தட்டியபஞ்சகாலத்திலே தங்கள்காரியபபேர்
ஆர்தட்டினுந்தட்டுவாராமலே யன்னதானத்துக்கு
மார்தட்டியதுரைமால் சீதக்காதிவரோதயனே. ௪

நேசித்துவந்தகவிராசர் தங்கட்குநித்தநித்தம்
பூசிக்குநின்கைப்பொருளொன்றுமேமற்றப்புல்லர்பொருள்
சேசிக்குஞ்சந்தடைப்பார்க்கும்வேசிகருமவேலைசெய்யுந்
தாசிக்குமாகுங்கண்டாய் சீதக்காதியாலிலையே. ௫

ஓயாதபுல்லரிருந்தென்ன போயென்னவெட்டிமரம்
காயாதிருந்தென்ன காய்த்துப்பலனென்ன கைபரப்பிப்
போயாசகமென்றுரைப்போர்க்குச் செம்பொன்பிடிபிடியா
ஈயாமலீபவன்வேள் சீதக்காதியொருவனுமே. ௬

காய்ந்துசிவந்தது சூரியகாந்திகலவியிலே
தேய்ந்துசிவந்தது மின்னார்நெடுங்கண்கடோல்பலநூல்
ஆய்ந்துசிவந்தது பாவாணர்நெஞ்சமனுதினமும்
ஈந்துசிவந்தது மால்சீதக்காதியிருகரமே. ௭

தோட்டாளன்காயற் றுறைசீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்பம் நாட்டிவைத்தான்றமிழ்நாவலனை
ஓட்டாண்டியாக்கியவர்கடம்வாயிலொருபிடிமண்
போட்டானவனுமொளித்தான் சமாதிக்குழிபுகுந்தே. ௮

தேல்கொடுத்தாய்திருச் செந்தூரர்க்கம்பியினமீதுவைக்கக்
கால்கொடுத்தாய்நின்மணவாளனுக்குக்கவுணியர்க்குப்
பல்கொடுத்தாய்மதவேளுக்கு மூவர்பயப்படச்செங்
கோல்கொடுத்தாயன்னையேயெனக்கேதுங்கொடுத்திலையே. ௯

பொல்லாதமூர்க்கருக் கெத்தனைதான்புத்திபோதிக்கினும்
நல்லார்க்குண்டான குணமவருமோநடுராத்திரியிற்
சல்லாப்புடவைகுளிர்த்தாங்குமோ நடுச்சந்தையினிற்
செல்லாப்பணஞ்செல்லுமோ தில்லைவாழுஞ்சிதம்பரனே. ௰

மூவேந்தருமற்றுச் சங்கமும்போய்ப்பதின்மூன்றொடிரு
கோவேந்தருமற்று மற்றொருவேந்தன்குடையுமற்று
பாவேந்தர்காற்றி லிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
தேவேந்திரதாரு வொத்தாய்ரகுநாதசெய்துங்கனே. ௧௧

முன்னநின்னன்னை முலையூட்டிமையிட்டுமூக்குச்சிந்திக்
கன்னமுங்கிள்ளியுகாளல்லவே யென்னைக்காப்பதற்கே
அன்னமுமஞ்ஞையும் போலிருபெண்கொண்டவாண்பிள்ளைநீ
இன்னமுஞ்சின்னவன்றானோ செந்தூரிலிருப்பவனே. ௧௨

முற்கரையப்பறையேற விட்டாட்கொண்முதல்வருள்ளக்
கற்கரைக்கும்படிபோதித் திருங்கருணைக்கடலைச்
சிற்பரைக்குட்டியை யெங்கெங்குதிக்குஞ்செங்கரும்பின்
சர்க்கரைக்கட்டியைக்கண்டேன் செந்தூரனுந்தானத்திலே. ௧௩

இன்னஞ்சிறுபிள்ளை செங்கோட்டுப்பிள்ளை சிவந்தபிள்ளை
பொன்னன்மணிப்பிள்ளை பூலோகமெங்கும் புகழும்பிள்ளை
சொன்னெஞ்சுழல்கின்ற சூரனைவென்றசொக்கேசர்பிள்ளை
உன்னைக்கிளிப்பிள்ளை செந்திற்குறத்திக்குமாப்பிள்ளையே. ௧௪

நாட்டிற்சிறந்த திருமலையாதுங்கநாகரிகர்
காட்டில்வனத்திற் றிரிந்துழலாமற் கலைத்தமிழ்தேர்
பாட்டிற்சிறந்த படிக்காசனென்றொருபைங்கிளியைக்
கூட்டிலடைத்துவைத்தா யிரைதாவென்றுகூப்பிடுதே. ௧௫

விண்ணுக்குமண்ணுக்கும் போராய்விளங்குதேவேந்திரனென்று
கண்ணுக்கினிய துரைசீதக்காதிகமலநிகர்
தண்ணுக்கிசைந்த வதனசங்ரோகயசாமியிந்த
மண்ணுக்குள்ளேயொளித்தான் புலவோர்முகம்வாடியதே. ௧௬

மறந்தாகிலுமறைக்காசுங்கொடா மடமாந்தர்மண்மேல்
இறந்தாலதென்ன விருந்தாலதென்னவிறந்துவிண்போய்ச்
சிறந்தானுங்காயற் றுரைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப் புலவோர்தமக்கும்பிழைப்பில்லையே. ௧௭

என்னைக்கன்றுமுத்தனைக்குனிக்குமிறைவனையனைக்குமேயன்று
மன்னனைக்கன்றிப்பின்னனைக்குதவா வன்புளாய்வருந்திவாடுவனோ
முன்னனைக்கொன்றுபின்னனைப்புரந்த முதுபகையவன்பிதாவுறுமற்
கன்னனைக்கொன்று விசயனைப்புறந்தசவுத்துவாகாயலாதிபனே. ௧௮

கல்லடிக்குமெளியிரண்டு காதடிக்குளடிப்பதெனக்கவிதைகேட்டு
பல்லடிக்கிகிடெனப் பறையடிக்குநெஞ்சர்தமைப்பாடுவேனோ
வில்லடிக்கும்பிரம்படிக்குங்கல்லடிக்கும்விரும்பிநின்றமெய்யனீன்ற
செல்லடிக்குந்தடவரையிற் சேரடிக்கவலையடிக்குஞ்செந்திலானே. ()

குட்டுதற்கோபிள்ளைப்பாண்டியனிங்கில்லைக்
குறும்பியளவாக்காதைக்குடைந்துதோண்டி
எட்டினமட்டறுப்பதற்கோவில்லியில்லை
இரண்டொன்றாய்முடிந்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக்கூத்தனில்லை
விளையாட்டாக்கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோதறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும்புலவரெனத் திரியலாமே. ௨௰

சீதக்காதியின்பேரில்தாசிபாடியது.

தினங்கொடுக்குங்கொடையோனே
  தென்காயற்பதியோனேசீதக்காதி
இனங்கொடுத்தவுடமையல்ல
  தாய்கொடுத்தவுடமையல்லவெளியாளாசை
மனங்கொடுத்துமிகழ்கொடுத்துமபிமானந்
  தனைக்கொடுத்துமருவிரண்டு
தனங்கொடுத்தவுடமையெல்லாம்கள்ளர்கையிற்
  பறிகொடுத்துத்தவிக்கின்றேனே. ௨௯

ஆகச்செய்யுள்-௧௮௭.

சவ்வாதுபுலவர்

இளையாளன்சேதுபதி ரகுநாயகன்கிஞ்சகவாய்
இளையாக்கல்வியிடத்து கம்பீசரெடுத்துமென்றும்
வளையாதபொன்முடி சற்றேவளையுமகுடமன்னர்
தளையாடியகையிற் காளாஞ்சியேந்துஞ்சமயத்துமே. ௧

பானுகிரணம்பார்க்கும் பங்கேருகநிலவு
தானும்வரப்பார்க்குஞ் சகோதரங்கள்-வானமரும்
மையைப்பார்க்கும்மயில்கண் மாவிசயானந்தரங்கன்
கையைப்பார்க்கும்புலவோர் கண். ௨

பாலையிலான்பின்னங்காற் பஞ்சுளியென்றேசுளிப்பான்
பாலையிலாள்பின்னென் படுவாளோ-சேலையிலே
ஆடுமயிற்பிரம்பூ ரானந்தரங்கதுரை
காடுகனிலென்னிள மின்னாள். ௩

பஞ்சு உளியென்று கோபிப்பாள்.

அலையான்கலடுபடா ஞருடங்காயான்
இலையென்பதோர்நாளு மில்லை-தலைசேர்ந்த
சாலைமுத்துக்கிருஷ்ணனருள் சற்குணசிந்தாமணியைச்
சோலையென்றுசொன்னவரார் சொல். ௪

செல்லப்பன்கச்சியிலே சேர்ந்ததற்பினுமணிகள்
நல்லவருமேகநிலவீதியாஞ்-சொல்லவே

முட்டின்றியொன்றிரண்டு மூன்றுநான்கைந்தாறேழ்
எட்டொன்பத்தா னதுவே. ௫

கச்சிசெல்லப்பன்னொன்றின்பின், அவனோடுசேர்ந்து ஆ-ஒன்று இரண்டாயின்-மணி-மூன்று-நான்காயின-தரு-ஐந்து - ஆறாயின-மேகம்-ஏழு-எட்டாயின-நிதியம்-ஒன்பது-பத்தாயின.

ஆகச்செய்யுள்-௩௬௨.

—*—

காளிமுத்து.

நெல்லச்சொன்னாபரத்தைக்கைம்மாவைநிதரிகமும்
தெல்லச்சொன்னாவலர்க்கீயுங்குழந்தைவிசயநின்பாற்
செல்லச்சொன்னாளென்னையிப்போதெம்மையலைத்தீர்த்திடென்று
சொல்லச்சொன்னாளந்தமின்னாள்பன்னாண்மலர்ச்சோலையிலே. ௧

பழுத்தான்மரத்தின்பரவையைப்போலநற்பாவலர்க்குக்
கொழுத்தான்வழங்குங்குழந்தையென்கொங்கையைக்கூறுகிறாள்
அழுத்தாதவேளையில்வெந்நீர்பன்னீர்மதியும்மழல்சேர்
கொழுத்தான்மதனுங்கொழுத்தான்பருவக்குறிப்பரிந்தே. ௨

பொன்னார்மருமத்தன் பூம்பாவைவேலப்பூபனருள்
மன்னாகுழந்தைக்குருநாத நீகவரோதயனே
பன்னாண்மலர்க்குழற்பின்னா ளெந்நாளும்பரிந்தணைய
நன்னாளிந்நாள்வரச்சொன்னாண் மின்னாண்மணநாளென்னவே. ௩

மாகமழைக்கரன்பூம்பாவை வேலப்பன்மைந்தன்மின்னார்
மோகன்குழந்தைக்குருநாதன் வெற்றிபினின்மோடிவைத்துப்
பாகமொழிக்குழன்மாதே விரித்துப்படமெடுக்கும்
நாகமறைத்துக்குழ னமக்கிதனலமல்லவே. ௪

போதத்தைமேவுமயிலைக்குழந்தைக்குப்போர்மதன்செய்
கேதத்தையுங்குயிலோதத்தையுந்தனக்கிண்ணத்தினா
மோதத்தையுந்துயிலாதத்தையும்மயன்முட்டுதென்றல்
வாதத்தையுந்தரியாதத்தையுஞ்சொல்விவாதத்தையே. ௫

வண்டாங்கிசைபயின்மாலையின்வேலப்பன்மைந்தனிதி
கொண்டான்கிளையவளர்த்தான்குழந்தைக்குவட்டின்முன்னே
பண்டாங்கிசையினன்மால்கொண்டொம்பன்குளத்தினைக்
கண்டாங்கிளையைக்கிழித்தாலென்னபாவங்கருதுவதே. ௬

பாம்பல்-அரவாபரணன்-குளத்திலபேக்கன் கெற்றிக்கன்றுகிய அக்கிலிதாங்கி-அவன்வாகனமாகிய ஆடு.

வணக்கொத்தளவஞ்சிபூஞ் சோலைத்தன்னிலவளருமிரு
தணக்குன் அசெய்யுந்தொழில்சொல்லவொதபேனைக்கண்டாற்
கலக்கும் புளிக்கும்பாரிக்கும்பூரிக்குங்கண்சுழக்குஞ்
சிலக்குந்தணக்குமெணக்குமுண்டாக்குந்திளஞ்சன்னடையே. ௭

ஆகசெய்யுள்-௧௬௬.

பாண்டியன்கலித்துறை.

காராருசம்புலைவரிவென்மாதுசரீரமெல்லாம்
பொராராசாத்துக்கிவன்பொருட்டேபகம்பொற்கிரண
காராசதிவ்வியகிரீடவிபாடத்தடிக்கடக்கைப்
பராரசாரதணராமபராக்கிரமபாண்டியனே. ௧

காணிமுகிற்குலமெல்லாம் விளக்குகடிக்கிட்டநீ
வேணியுயப்படிச்செய்திலையே விணிசெல்லயளில்
வணிகுதித்து வளர்பூங்கமுகின்மடலொடியப்
பாணிமுறிக்குந்துறைவா பராக்கிரமபாண்டியனே. ௨

ஆர்க்குங்குளிருநிலவுடர்கோ னின்னலங்கல்பெறு
வார்க்குங்குமழலையாட்கனலாகும் வடக்குந்தெற்கும்
மேற்குங்கிழக்குமொரு வெறுப்பாய்நின் துவின்பிணைவெட்டிப்
பார்க்கும்புகழுக்கிறைவா பராக்கிரமபாண்டியனே. ௩

கூரம்பொருத்தவிழிமால் கதலிக்குருத்திவிட்ட
ஈரம்பொறுக்கவருந்திலளே யிந்திரனிட்டசெம்பொன்
ஆரம்பொறுக்கபுயமீதி லாயிரகாவுரக
பாரம்பொறுத்தபுயலேபராக்கிரமபாண்டியனே. ௪

வெறிக்குங்குமக்கொங்கையீதேயிளம்பிறைவெள்ளிநிலா
எறிக்கும்பொழுதவர்தாயிலையே யிலங்காபுரியைக்
குறிக்கின்றராவணன்பொன்முடிபத்துங்குரங்கைவிட்டுப்
பறிக்கின்றசன்பகமாறுபராக்கிரமபாண்டியனே. ௫

கரும்பேய்க்கும்வாட்கண்ணிபாங்கானர்கண்கொண்டுமவிட்ட
பெரும்பேய்க்குவேப்பிலைக்காப்புதலாய் பிலைசேர்பசங்கோல்

கரும்பேய்க்குமென்றூழைபாரமுதூட்டியடர்த்துகொல்லை
வரும்பேய்க்குவானூதவுங்குலசேகரமன்னவனே. ௬

பூணித்திலத்தப்புயல்விரமாரன்புகல்கவிக்கு
காணிப்புலவர்செல்லாதென்செய்பவரிக்காணிலத்தில்
ஆணிக்கனகபணைந்தரிற்பூணைமயார்கொள்ளுவார்
மாணிக்கந்தித்திக்கிலென்றுருமற்றமறாங்கனே. ௭

என்னிர்மைநாளுக்கத்தியனுமியவென்பதெல்லாம்
வெண்ணிர்மையன்றிவிரகல்லவேயிவ்வியனுலகிற்
பண்ணிர்மைதேரும்பராக்கிரமமாரன்பதங்கழுவுந்
தண்ணிர்குடித்தல்லவோகும்பயோனிதமிழ்க்கற்றதே. ௮

காமப்புவனமபுக்கதோளாட்குநின்றன்கழுத்திலிட்ட
வேம்புதனைக்கும்பிவிபிசலையோவெகுண்டாச்சியர்கள்
தாம்பினடிக்கஉரலோடுகட்டத்தலைப்பட்டுச்சிப்
பாம்பினடிக்கினறமரவேபராக்கிரமபாண்டியனே. ௯

கடந்தூக்குவேழப்படைச்சேவரக்கண்டுகண்கண்மூத்த
கடந்தாங்குவாடுப்கிளிக்கென்செய்வேன்மணிவாய்திறக்க
விடந்தாங்குபாம்பின்படத்தின்மிசைநிமிர்த்தியெனைப்
படந்தாங்கவாடுமபுயலேபராக்கிரமபாண்டியனே. ௰

சடம்பழுக்குங்கிழட்டுக்குருசிர்தலைசாய்த்துநின்ற
முடம்பழுக்குங்கைதைநற்றுறையிற்றெங்குழப்புடைக்காய்
குடம்பழுக்குங்கொற்கையாங்குலசேகரன்கூடலிலென்
உடம்பழுக்குமிறையம்புழிகாருணைந்திலரே. ௧௧

மற்றொருப்பிலாக்கொடைச்சண்பகமாறனைரோதநின்
வெற்றிக்கிரண்டுண்டங்காதகாரியமேருகிரிச்
சுற்றிலுங்கீர்த்தியடங்காது நின்னுடைத்தோடழிவரக்
கற்றைக்குழலிக்குமாலடங்காதினைகண்டதே. ௧௨

விருத்தம்.

ஒருவானுதல்பண்டுளங்களிக்கவுயர்வான்முகடுகிழித்தெதிர்த்து
மருவார்தருவின்மாக்கொணர்ந்தமதுரைவடிவேலதிவீர
அரவார்வேம்பின்பசுங்கண்ணி யந்தியிறைவிக்கருளென்று
இரவாதிருக்கநீயளித்தற் கிரங்காதிருந்தாயினுமானே. ௧௩

இரட்டையர்.

தேங்குபுகழாங்கூர் சிவனைவல்லானியப்பா
நாங்கள்பசித்திருக்க ஞாயமோ-போங்காலும்

கூறுசங்குடோன் முரச கொட்டோலைசயல்லமற்
சோறுகண்டமுளியார் சொல். ௧௪

மூடர்முன்னேபாடல் மொழிக்கலுறியரோ
ஆடெடுத்ததென்புலியூரம்பலவா-ஆடகப்பொற்
செந்திருவைப்போலணங்கைச் சிங்காரித்தென்னபயன்
அந்தகனேநாயக னுனல். ௧௫

வேலின்றமுத்தர்தலை வெட்டினுனேவிடையாள்
காலின்றமேனி தயங்கவே-மேலுமிதன்
எத்தனைகாலென்றே யிடறுவான்பாற்றுடர்ந்த
அத்தனையும்வேண்டு மவர்க்கு. ௧௬

மாக்காட்டுவேளாளன் மகளோருமகன்பாற்
போக்காட்டியின்பம் புணர்க்கவே-ஆக்கானும்
மக்கண்மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு. ௧௭

குன்றக்குழியுங் குறுகிவழிநடப்ப
தென்றவிடிபுமெமக் கென்கோவே-ஒன்றக்
கொடாதானைக்கோவென்றக் காலென்றக்கூறில்
இடாதோசமக்கிவ் விடி. ௧௮

காளமேகப்புலவரும் இரட்டையரும்.

காணென்றாலஞ்சிருக்கு கற்சாபக்கற்சபம்
பாணக்கால்மன்னின்ற பாணமே-தாணுமே
சொரூபமேவுஞ் சிலேனேநீயெப்படியோ
கோரப்புரமெரித்த கேர். ௧௯

ஆகாவியா லிலவுலகெங்கும்
விகபுகழ்க்காள மேகமே-பூகர
வில்கொண்டசெக்கணவாய் வேகுதேவையடையோ
மன்னினபாண மென்றவாய். ௨௰

கட்டளைக்கலித்துறை.

புராதனமான தமிழ்ப்புலவீர்! தப்புன்றாக்கு
மராமரம்விட்டிடுக்குவர்க்கதென்றோவலைகேட்டிலேயோ
தராதலமென்றமிழ்மாரனேபுக்கன்றம்பியையும்
இராகவனென்றமிலக்குவனென்றமிருக்கதுவே. ௨௧

ஆகசெய்யுள்-௩௨௰.

ஒப்பிலாமணிப்புலவர்பாடிய அகவல்.

ஆடெரிபடர்ந்தகோடுயர்நெடுவரை
ஆபமிழப்பத்தேம்பயிழுமல
இலவினார்ந்தனபொல்லாவறுமுலை
கவைவிதாறுஞ்சுவைவிதாறுமபாக்காறைத்
குழுவிதாய்முகநோக்க
பனைவிடுவென்முகநோக்கயாழும்
நின்முகநோக்கிவந்தனக்குழுறு. ௧

குருணைராஜன்.

அந்தநாள்வந்திலை யாருங்கவிப்புலவோய்
இந்தநாள்வந்துநீ நொந்தெனையடைந்தாய்
தலையினைக்கொடுபோய்த் தம்பிகைக்கொடுத்தென்
விலைதனைப்பெற்றென் வெறுமைநோய்களைவே. ௨

பாக்கையிலேவாறு பருடத்தியாதியுளக்
கேட்குமதுவும்போ லிரண்டுளதே-வேந்தர்
முடித்தலையுடன்காலிலே முத்தமிழோர்க்கிய்யும்
படித்தலையுடன்கையிலே பார். ௩

வெம்புக்காலை வெறும்புலிநஞ்சிரம்
செம்பொன்கோடிவிலை யெனச்சிந்தித்தான்
உம்பர்கோடு முனிவர்தேடினும்
எம்பிபோலெமக் கியாவருமிலையே. ௪

ஆறுபெருக்கற் றருந்திடர்தான்பட்டாலும்
சோறளையயாதோ உலகாற்றத்-தேற
மதிகையேயாறும் பெண்கவிதையாற்றச்
சிறியையோர்க்குமுறை செப்பு. ௫

வில்லிவனேயதே மீசைமுறுக்கிச்சினத்த
முல்லைமனைப்பெண்மேன் போதாதே விட்டா
வந்தாரடாமுருகர் வாதகடப்பந்தாரைத்
தந்தாரடாமன் மதா.

செய்திருகாரன் திருவழகைக்கண்டவுடன்
வந்திக்குமாரன் வதைத்திறன்-அந்திக்கு

முன்னமேசென்றெனது மோகமெலாஞ்சொல்லிவந்தால்
அன்னமேகுட்டிடுவேன் யான். ௭

தங்கடனமிருக்கத் தார்வேந்தரெல்லோரும்
எங்கடனத்துக்கே-யிச்சிப்பார்-எங்கடனம்
ஈச்சிருக்கும்பாலிருக்குங் காமபாணங்கள்பட்டு
பிச்சிருக்குமவேண்டாம பிளாய். ௮

இடுவோர்சிறிதிங் கிரப்போர்பெரிது
கெடுவாய்மனமே கெடுவாய்-படுபாவி
கூவத்துநாரணனைக் கொன்றாயேகற்பகப்பூங்
காவெட்டலாமோ கரிக்கு. ௯

மையூருங்கண்ணார் மயங்கப்பொருகரும்பு
கையூருங்காமாவுன் கண்ணுனை-செய்யூர்
வளவனையுனும்பிரிந்த வாறுனக்குச்சொன்ன
உளவனையினுனென் றுரை. வளவன்-நயினான். ௰

ஆழிவாய்ச்சத்த மடங்காதேயான்வளர்த்த
கோழிவாய்மண்கூறு கொண்டதோ-ஊழி
திரண்டதோகங் குறின்காணுந்தேரும்
உருண்டதோபாதாளத் துள். ௧௧

அரவங்காந்ததோ வச்சுமரமிற்றுப்
புரவிக்கயிறறுவிப் போச்சோ-இரவிதான்
செத்தானோவில்லையோ தீவினையோபாங்கியெனச்
செத்தால்விடியுமிரா. ௧௨

முலையுங்குழலு முளைப்பதற்குமுன்னே
கலையும்வளையுங் கழன்றாள்-மலையில்
சிராப்பளியானேறிவருஞ் சேவின்மணியோசை
கிராப்பழியுங்கொள்ளா ளிவள். ௧௩

பாண்டியன்றானேன் பசலைமுலைப்பாலானேன்
ஆண்டிகையிலோந்தியதொன் றானேனே-வேண்டியபோ
துள்ளங்கைத்தேனானே னோர்மதலைபூத்தபின்
புள்ளங்கைத்தேனானே னுனக்கு. ௧௪

மூட்டத்துப்பன்றி முளறித்திருப்பதத்தைக்
கிட்டத்துப்பன்றிக் குடந்தேனே-தொட்டு

மருங்கிலேசங்கெடுத்த மாலேயெனக்கு
வருங்கிலேசங்கெடுக்க வா. ௧௫

வேறு.

மாதர்க்கிதங்கவிவாணர்க் குரசாலவணக்கக்குரு
நாதர்க்குநீதியோடாசார நண்பினையந்தவர்க்குக்
கோதற்றவாசகம்பொய்க்குப்பொய் கோளுக்குக்கோளறிவி
லாதர்க்கிரட்டிப்பறிவுடையோர் செய்யுமாண்மைகளே. ௧௬

குழற்காலரவிந்தங்கூம்பக் குமுதகையவிழ்ப்ப
நிழற்கான்மதியமன்றோ நின்றிருக்குநீயவன்றன்
அழற்காலவிர்சடைமீதே யிருந்துமவ்வந்திவண்ணன்
கழற்காலணங்குநீயோ வணங்காமுடிக்கைதவனே. ௧௭

பட்டாளைதவண்டுபாடுங் குழற்கண்வலிதன்
றட்டாமறையைத் தொழுதேனினியென்றலையில்விதி
தீட்டான்காருமுகில்போலேவரு மந்தச்சேட்டெருமை
மாட்டானினிவரமாட்டான் வந்தாலும்வணங்குவனே. ௧௮

சீமானுநாமகள் கோமானுமேத்தித்தினம்பணிந்து
பூமாலைசாத்திய ரத்னசபாபதிபொன்னடிக்குப்
பாமாலைசாத்தினின்றே னவனூல்மிசப்பாடுபட்ட
ஏமாவுன்னூலினியாமா வென்பாவினியெய்துதற்கே. ௧௯

தடங்கொண்டகல்விலின்மெல்லெண்பூட்டித்தமதூரத்தில்
வடங்கொண்டுசாத்திவிடங்கொண்டுபார்த்துமணிகிளரும்
படங்கொண்டபாம்பிற்பழகியபின்மலைப்பாவைதன்னை
அடங்கொண்டவொற்றித்தியாகேசர்புற்றினிடங்கொண்டதே. ௨௰

விடங்காட்டிக்கண்டத்திற்றோலுரிகாட்டித்தன்மெய்யினைப்புற்
றிடங்காட்டிவாலையொருபுறங்காட்டிவண்டேறுமலர்த்
தடங்காட்டியபொழிலாரூர்த்தியாகர்தமதுபொற்றாட்
படங்காட்டியாடிநின்றாருலகேழும்பணியென்னவே. ௨௧

புரந்தனைமாலைச்சதுராணனத்தனைப்போகியைமுப்
புரந்தனைச்சாதித்திமையாதகாட்டப்புலோமிசைவாழ்
புரந்தனைமானுந்திருவொற்றியூரநின்பொன்மணிக்கோ
புரந்தனைக்கண்டனன்காணேனுதிக்கும்புரந்தனையே. ௨௨

வெண்பா.

நல்லம்புலியணிந்தோ னுளதனுக்கெட்டாநாள்
வில்லம்புடன்கூடி விட்டாலும்-வல்லி

இடையாளைமூன் றுலக மேழளந்தோன்மைந்தன்
குடையானதன்றோ கொடிது. அம்புலிப்பணிந்தோறல்லூசிரை.

எட்டாக்ள்-அக்தம்-கைவில்-புருவம்-அம்பு-கண்.

வாழ்நிலைசேர்பொன் னுலகம் வண்களங்கைக்கோபுரத்தின்
ஏழ்நிலைமேலேறிடினு மேறலசம்-பாழ்மனமே
அன்புன்னைக்காட்ட வரவறிவதேயருமை
தென்புல்லைக்காட்டனடி சேர். ௨௪

கஞ்சிகுடியாளே கம்பஞ்சேராண்ணலுளே
வெஞ்சினங்களென்னும் விருப்பாளே-நெஞ்சதனில்
அஞ்சுதலையாவருக் காறுதலையாவாளே
அஞ்சமுககாமாட்சி காண். ௨௫

சிதாவிந்தபுயன் றென்னவன்றன் றிண்சிலம்பிற்
போதானுங்கண்ணுலும் போர்செய்தோர்க்-கோனும்
கொடியிடையார்தம்மாற் குணமாமோவிந்தக்
கொடியிடையார்கொண்ட துயர். ௨௬

போதாற்போர்செய்வான்-மன்மதன்-கண்ணுற் போர்செய்வான் பரமசிவன்-இவர்கள்கொடி மீனம்-இடபம் - இவற்றிடையிலுள்ளது-மேஷம-ஆடு.

அப்பிலேதோய்த்திட் டடுத்தடுத்துநாமதனைத்
தப்பினுனம்மையது தப்பாதோ-இப்புவியில்
இக்கலிங்கம்போனலென் னேகலிங்கமாமதுரைச்
சொக்கலிங்கர்தானிருக்கச் சொல். ௨௭

ஆகசெய்யுள்-௩௩௬.

பட்டணத்துசுவாமிகள் பாடியது.

காப்பிளக்கப்பொய்யுரைத்து நவநிதியுந்தேடி
நலமொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தோண்மரத்திடுக்கிற் காலைநுழைத்துக்கொண்டே
ஆப்பதனைப்பிடித்தசைத்த பேய்க்குரங்குபோல
அகப்பட்டீர்கிடந்துழல வகப்பட்டீர்நீரே. ௧

சிவப்பிரகாசசுவாமிகள்.

ஐயநின்சென்னிமிசையுறைநின்றமடமங்கையாரென்னவுமை வினவ
வும், அன்னதொருமடமங்கை யன்றுவெண்டிரைகொழித் திடுகொ
ழுகு தண்புனலெனத், தூய்யவொளியானனங்கரியவிழிகாதுவாய்த்தோ
யத்திதுண்டோவெனச், சொல்லருங்கமலமர்சாலிமலர்கொடிவல்லே
தூயசெங்குமுதமென்னப், பொய்யெனவினைத்துநற்கொங்கையுங்கூந்
தலும் புனலினிடையுண்டோவெனப், புற்புதஞ்சைவலமெதற்கே
மறுத்துப் புகன்றிடுங்காவெனத் தையலவளோவென்னகாரணம்வ
ங்கியெமதன்பிழைபொறுத்திடென்றே, சங்கரனுரைத்திடத்திருவுள
மகிழ்ந்தசிவ சங்கரியுமைகாக்கவே. (௨)

ஆனவனிடத்திலே யைங்கரன்வந்து காளையெவன் செவியைமிக
வும், அறுமுகன்கிள்ளினனென்றே சிணுங்கிடவுமத்தன் வேலவனை
நோக்கி, விரைவுடன்வினவவேயண்ணனெனசென்னியில் விளங்கு
கண்ணெண்ணினனென், வெம்பிபிள்ளையாப்பார்த்துநீயப்படிவிகட
மேன்செய்தாயெனமருவுமென்கை நீளமுழமளந்தானெனயவில்வ
னைக்குநிற்கமலையாயனுதவவருமுமையவளைநோக்கிநின்மைந்தரை
ப்பாராயெனக்கருதரியகடலாடையுலகுபலவண்டங்கருப்பமாய்ப்பெ
ற்றகன்னி, கணபதியையருகழைத்துமகிழ்வுகொண்டனள்களிப்புடனு
மைகாக்கவே. (௩)

அம்பிகையாண்டன்னைநோக்கி யுன்றபராண மாவமெனவுமையை
நோக்கி, அரியாவசயனத்தையரவுருவடாணத்தையறியார்கொல்லிதுவு
மென்ன, நம்பியமனைதொருமிரந்துணுமாண்ட நீயென்னகாணருதன்றி
வேனென, நவையுறும்பொய்புகன்றிரெனப்பாரத நடந்ததெகாரிய
மென, வெம்பியொருவன் பிரம்பாலடித்தானெனவிளங்கிழையொரு
த்திதாம்பால்வீசினதுசொல்லென்ன, வெண்ணாயிரம்பெண்கள்மிகுக
ற்பை நீக்கினையெனப், பம்புகர்பிணிவோரிரட்டிப்புநீக்கினது பசுஞ்செ
னிமேகவெனப்பரமருடனிவ்வாறுவிளையாடும்பச்சைப்பசுங்கொடியுமை
க்காக்கவே.

அச்சுதனளிப்பனிலமுமதுவேயன்வித்தை யருளுவன்பலபத்திரன்
அலமுதவுவன்சமன்பகடவனர்தமந்நாளதோருதுமுண்டே, மூச்சி
ரவயற்பண்டையினைகொழுவதாக்குவோமெய்ப்புடனிமூத்திறுக்கு, மு
ந்தியவடக்கயிற்றுடன்மற்றுமதன்பர்முன்போயிரந்துகொள்வோம்,
இச்சையுடமதிலையதனையளுகியகந்தனிளைமயொடுமோடுமேயபெ

ன் இனியுழுதுபயிரிடுகென்றுநன்றிதைவிட்டிரக் துன்பறீனமெனவே கச்சு, மூலமாதுமையுரைத்திடும்புத்தியைக்கைக்கொண்டுளத்திலிது நற், காரியமெனக்கருதிமெத்தக்களித்திடுங்கண்ணுறுதலுமைகாக்கவே.

கவுரிகமலாயரணிரந்தசோறிதுவெனக்கமலை மண்கண்டேனெக்கா ளையொன்றேயாற்சன மாடுமேய்த்ததைக் கட்டியைனுரோவெனச்சி ணொருவர்தென்ன, வந்தூதுசென்றகதைசெப்பிலொருபாரதமெனவ சேரொடு திருடினானளைக், கட்டுண்டசெய்திநாமறிவோமென்னச் சையினடமாடினானென்னவவ்வாடலாவ மறியாதோவென, ஆலம தைவன்னானென்ன மண்ணுண்டவதனையறியோமோவென, விவா மொடு மலைமகளுமலர்மகளுமிவ்வாறுவிளையாடுமிவர்கடு ணையாமவிவருபுத்ரமித்திரகளத்திரருடன் மேன்மேலுமிகவாழியே.

நிறையவுளதோ வெளிதோகொளுவோம்
பிறையைமுடிக்கணிந்த பெம்மான்-உறையும்
திருக்காட்டுப்பள்ளி திரிபாவாய்நீயுக்
கிருக்காட்டிப்பள்ளியெமக்கு. (எ)

அடுத்துவருந்தொண்டனுக்கா வந்தகனைத்தாளால்
அடர்ந்ததுவுஞ்சத்தியமேயானால்-யெடுத்ததொரு
மாங்கனிக்காயென்னைமடிபிடித்தமாபாவி
சாங்கனிக்காதித்தன்வரத்தான். (அ)

குடக்கோடுவானெயிறு கொண்டார்க்குச்சோழன்
முடக்கோடுமுன்னமணிவார்க்கு-வடக்கோடு
தேருடையான்றெவ்வுக்குத் தில்லைதோன்மேற்கொள்ள
ஊருடையமென்னுமுலகு. (கூ)

விருத்தம்.

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயாவப்
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங்கொளலா றுறுவயதாமளவும்
பேயகொண்டாலும்பெண்கொள்ளலாகாதே. (ய)

திட்டையிலேயிருந்து மனத்துறவடைந்த பெரியோர்கணிமலன்று ளோக், கிட்டையிலேதொடுக்குமுத்திபெறுமளவும் பெரியநங்கிடைக் குங்காம, சட்டையிலேமதியங்கிச்சிறுவருக்குமணம்பேசிவிருப்பிக் தாலி, கட்டையிலேதொடுத்து நகெக்கட்டையிலேகிடத்து [illegible] ந்தானே. (யக)

திருந்துதமிழிலக்கணவைர் திணைக்கோவை விருத்தகிரிச் செல்வற் கோதும்,பெருந்தகைமையுடயம்யாம்விடும்போலேவெங்கனூர்ப்பிடாரி காண்கஇரும்புவியுமொருமுருங்கைக்கொம்பொடியாமற்காசநிங்கிரு க்குமீகணம், முருங்கைதனைவேரோடுங்களைந்தனையென்றாக்கணக்கு மு றைநன்றாமோ.

இவர்பிதா.

கயல்வாய்த்தகண்ணியுலகின்றவல்லிபங்காவுனது
செயல்வாய்த்தவம்பற்குமல்லாதவர்க்குஞ்சிரிப்பல்லவோ
இயல்வாய்த்தவெநதைக்கியான்வாய்த்ததுவுமிங்கென்றெணக்கு
வயல்வாய்த்துமனைவாய்த்ததுவைநடர்கள்வாய்த்ததுமே. (௰௩)

முன்னமொருதமிழ்ப்புலவன்றனையுண்டுகண்டசுவை முதிர்ச்சியாலே
தன்னியலேமுழுதுமுரைத்தவையாமுன்னிளைக்கவார்ந்துதடங்காடத்தி
மன்னவனுண்டானெனுமாதலவத்தின்வலிதீர்மண்ணின்மீதே
என்னுடன்வந்தவதருத்தவிளங்கருணைப்பிரகாசனென்னுங்கோவே. ()

நாணியென்பதைநாரியென்றுரைத்திடுநாகையால்
வேணுவானதுவளைந்துபோயபுருந்ததுவென்றாற்
காணலாவதோருருவமெந்நாரியையக்கண்கால்
பூணுவார்மயல்காளையரென்பதும்புதிதோ. (௰௫)

அல்லிமலர்ப்பண்ணவனுமாராய்ந்தறிகவிதை
சொல்லியமிருவரிடைத்தோன்றியயான்-முல்லை
அரும்பிற்பொலியுமணிமுறுவனல்லாய
கரும்பிற்சனுநிகர்த்தேன்காண். (௰௬)

வேலையசுவாமிகள்.

ஆண்டதனுலெனையொவ்வாய்வித்தையினிற்றமையனினு மதிமமெ ன்றேபூண்டவுலகதனிலுள்ளார்புகல்வதுங்கட்டிருந்துமென்பதுமை தானே; காண்டகுகன்மணியேநல்லிளங்கருணைப்பிரகாசக் காளாய்நீ தான் மாண்டனையென்றறிந்திருந்து முயிர்தறித்தோ யானுமிருவந்நே சனே. (௰௭)

சத்திமுத்தப்புலவர்

நாராய்நாராய் தசங்கநாராம
பழம்படுபனையின்கிழங்குபிளந்தன்ன
பவளக்கூர்வாய்ச்செங்கானாராய்
நீயுநின்மனைவியுந்தென்றிசைக்குமரியாடி.

வடதிசைக்கேகுவீராயின்
எம்மூர்ச்சத்திமுத்தவாவியுட்டங்கி
நனைசுவர்க்கூரைக்கனைகுரற்பல்லி
பாடுபார்த்திருக்குமெம்மனைவியைக்கண்டு
எங்கோன்மாறன்வழுதிகூடலில்
ஆடையின்றிவாடையின்மெலிந்து
கையதுகொண்டுமெய்யதுபொத்திக்
காலதுகொண்டுமேலதுதழீஇப்
பேழையுளிருக்கும்பாம்பெனவுயிர்க்கும்
ஏழையாளனைக்கண்டனமெனுமே. (௰௮)

வெறும்புக்கையுமரிதாங்கிள்ளைசோறுமென்வீட்டில்வரும்
எறும்புக்குமாற்பதமில்லைமுன்னாளிருங்கலியாம்
குறும்பகைத்தவிர்த்தகுடிதாங்கியைச்சென்றுகூடியபின்
தெறும்புற்கொள்ளையானைகவளங்கொள்ளாதுற்றெவுட்டியதே. (௰௯)

வரதுங்கபாண்டியன்

அஞ்சலென்றபாதலமுங்கணபணமுங்கங்கணமு
மரைக்கிசைந்தபுலியுடையுமப்புலிச்செஞ்சடையுங்
கஞ்சமலர்ச்சேவடியுங்கனைகழலுஞ்சிலம்புங்
கருணைபொழிதிருமுகமுங்கண்களொருமூன்று
நஞ்சையுண்டமணிமிடறுமுந்நூலுமார்பு
நலந்திகழ்வெண்ணீற்றொளியுமறியாலுமழுவும்
பஞ்சடிச்சிற்றிடையமையாளொப்பனைபாகமுமாய்ப்
பால்வண்ணனுமாத்திருக்கப்பயமுண்டோவெமக்கே. (௨௰)

அவர்மனைவி.

ஆக்கையெனும்புழுக்குரம்பைபனைத்தனையாப்பொருளை
யருளொளியைப்பராபரத்தைக்கப்புறமாமறிவை
யுமறமயிர்முனைக்குமிடமறவெங்கெங்கு
நிறைந்துநின்றமுழுமுதலைநினைவிலெழுஞ்சுடரைப்
பாகியங்கள்செய்தனந்தந்தவக்குறைகண்முடிக்கும்
பழவடியார்தமக்குதவும்பசுந்துணர்கற்பகத்தை
வாக்குமனைவிகற்பகத்தாலளவுபடாவொன்றை
மாசற்றவெறுவெளியைமனவெளியிலடைப்பாம். (௨௧)

ஆகச்செய்யுள்-௨௱௭.

பலபட்டைச்சொக்கநாதப்புலவர்

கின்றுபடியளக்கு நீலக்கொடிகளிரண்
டென்றுமுளவாங்குடந்தையீச்சுரக்-கொன்றுக்
குரைக்குமறையீந்தாரொன்றதனுக்கென்னே
வரைக்குமுறையியாவர். (க)

எடுத்தசனனங்கடொறுமீன்றெடுத்தாய்மார்
கொடுத்தமுலைப்பாலனைத்துங்கூட்டில்-அடுத்தமணிப்
பைந்நாகமணைதுயின்மால்பாலாழியுஞ்சிறிதா
மன்னுசிதம்பரதேவா. (உ)

முக்கணனென்றனைமுன்னோர்மொழிந்திடுவார்
அக்கணற்குள்ளதரைகண்ணே மிக்க
உமையாள்கண்ணொன்றரைமற்றான்வேடன்கண்ணொன்
றமையுமிதனாறென்றறி. (ங)

பாணியிலேபுள்ளிமான்பாகத்தேபச்சைமான்
வேணிதனிலேயோர்வெள்ளைமான்-காணுமலர்ச்
செம்மானுலவுந்திருமறைக்காட்டீசரே
எம்மானுக்கெங்கேயிடம் (ச)

கட்டளைக்கலித்துறை.

வான்பணிந்தாலவனென்பேயுரைக்குமலரிலயன்
தான்பணிந்தாலவன்றன்றலையேசொல்லுந்தாரணியுன்
பான்பணிந்தாலவன்கண்ணேபரிந்துபரிந்துரைக்கும்
நான்பணிந்தாலெனக்கார்சொல்லுவார்சொக்கநாயகற்கே. (ரு)

மெய்க்கேயணியும்பணியேயென்பேமுடிமேற்கிடந்த
கொக்கேவெண்கூன்பிறையேயரைசேர்ந்தகொடுப்புலியே
அக்கேயுமக்குக்கிடைத்தவுபாயங்களாவெமக்குஞ்
சொக்கேசர்பாதத்தைக்கிட்டுமுபாயத்தைச் சொல்லுங்களே. (சா)

தாண்டித்திரியும்விடையேரியோடென்றுதாங்கிப்பிச்சை
வேண்டிக்கலியுககாலந்தள்ளாமல்விரும்பிச்சொக்கர்
ஆண்டித்தொழிலைவிட்டையோமதுரைக்கரசிருந்து
பண்டித்துரைத்தனஞ்செய்தேபிரம்படிபட்டனரே. (எ)

ஆகத்திலேயொருபாதியென்னம்மைக்களித்தருடன்
பாகத்திலேயொன்றுகொண்டாயவண்மற்றைப்பாதியுமுன்
றேகத்திற்பாதியுஞ்சேர்த்தாலிருவருண்டேயவனே
யேகத்திராமலிருப்பாய்க்கைச்சந்தையுமென்னொத்ததுவே (அ)

துணையானமாரிபுவிசையைல்லாம்பெருக்கெடுத்தாலிலையடிக்
கணையானதுபுவியெல்லாமெடுத்துண்ணுங்கைச்சிலைகள்
லணையாகநின்றுபுவியினைத்தாங்குமென்றுசினியான்
பணையார்களஞ்சதைப்பதியார்செயலேயென்பண்ணுவதே. (௯)

மூன்றிலேக்கூப்பிடவோடிவந்தானைமுனரிமலாப்
பொன்றனையேறியிருப்பானைப்பூவியன்னைக்கரும்பைத்
தின்றனையென்றுகல்லாலெறிந்திட்டானைத்திருமதுரை
மன்றனைவீதியிலேயிலங்கானைவணங்குதுமே (௰)

நமக்கின்னெருருவகீரதவெண்மெலாதிகழ்க்குங்
குமக்கொங்கைபாகத்துக்கொச்சையுள்ளீர்கொடுங்கோளரவிற்
கிடைக்கும்பிறையையழித்தாலதற்குமிருப்பதியோ
முமக்குந்தலைச்சுமைபோமெங்கண்மாதுயிர்பெறுமே. (௰௧)

ஆனையுரித்துமதனைப்பார்த்திட்டடியும்பட்டு
மானமழிக்கவிருந்தேதிரிந்தமதுரைச்சொக்கர்.
ஞானமிகப்பெற்றுவாழ்வதெல்லாஞ்சொக்கநாயகிபான்
பானைபிடித்தமுகூர்த்தத்திறல்வந்தபாக்கியமே. (௰௨)

ஆய்முத்துப்பந்தரின்மெல்லணைமீதுன்னருகிருந்து
நீமுத்தந்தாவென்றவர்கொஞ்சும்வேளைநினைத்தணித்தம்
வேய்முத்தமோடென்குறைகளெல்லாமெல்லமெல்லச்சொன்னால்
வாய்முத்தந்தந்திடுமோநெல்வேலிவடிவன்னையே. (௰௩)

குதியானமனையுதைத்துள்ளங்காலினிற்கூனிமிர
மதியாகந்தெய்த்தவிலங்கேசன்மாமுடிபத்துநக
நுதியான்மிதித்துமுயலகன்மேனிநுதுங்கவின்று
மிதியாநின்றலருளெங்கேசொக்கேசர்தம்மெல்லடிக்கே. (௰௪)

மண்ணென்றமண்டலமெல்லாம்புரக்கும்வழுதிசெய்துந்
தண்ணென்றநெஞ்சந்தரித்திலனேதனுவேடனெச்சில்
உண்ணென்றபோதுண்டவர்சொக்கர்பாதியுடலம்மைப்
பெண்ணென்றறிந்துமடித்தானெவ்வாறுபிறம்புகொண்டே. (௰௫)

இன்றொருக்கவேண்டுமெவ்வாறொருக்குமோவெழிற்சேர்களந்தைக்
குன்றொருக்குங்கோபுரமொக்குமகக்குன்றதுபோல்
அன்றொருக்கவேண்டுமென்னல்வினைதீவினையாமிரண்டும்
வன்றொன்றுக்குமோவினித்தென்களந்தைக்காடவராயன்பெறவே. ௰௬

மாதாமபடியுண்டுமெய்சிவந்தான்குழல்கைத்திசைத்துச்
சேதாம்பலங்கனிவாய்சிவந்தான்செம்மலர்த்திருவின்
குதாந்தனைத்தாஞ்சிவந்தானவர்துதிசெய்ன்று
பாதாம்புயஞ்சிவந்தான்மல்லைப்பல்லவனே ௰௭

பாடுகதமிழ்க்குச்சிவந்தெழுந்தான்மல்லைப்பல்லவர்கோன்
காடுஞ்செடியுந்திரியாதிரட்டைக்கடுக்கன்செய்து
போடும்பொழுதென்னபூட்டகமாவற்பப்புல்லைறைக்கொண்
டாடும்பொழுதிருகண்ணத்திலேயின்றடிக்கின்றதே ௰௮

கான்றெண்டனிட்டகணக்குழலாளையென்கண்மணியை
தேன்றொண்டைவாச்சியைத்தென்கூடல்வாழ்சிறுபெண்பிள்ளையை
யான்றெண்டனிட்டபொழுதேயிடமென்னைக்குமடி
என்றெண்டனிட்டவிண்ணப்பமென்றோலையெழுதுவனே. ௰௯

மற்றொருவரைக்கண்டதன்போசத்தியவாசகராய்
உற்றோர்கழஞ்சுவெண்ணெய்க்கீன்றதாய்க்கொருகோடிபொய்கள்
சொற்றொனுந்தாமுமலர்சாட்சியென்றுசொன்னேனுமல்லால்
கற்றோர்கள்வயமின்கண்செய்யுங்கண்பொய்மின்களந்தியிலே ௨௰

அண்டத்தமரருமாயனும்வேதனுமாதனரும்
பண்டெடுத்தனைதவஞ்செய்தனநேரமணைப்பந்தலிலே
துண்டப்பிறையணிசொக்கர்கைத்தாலிக்குநீதுணிந்து
கண்டத்தைநீட்டினையேகூடல்வாழுங்கயற்கண்ணியே ௨௧

அற்பின்றதாயென்றுனைப்பணிந்தாலென்னவதியெல்லாம்
பொற்பின்றபூதெண்மபோற்குதித்தாய்புகழ்க்கடலில்வாழ்
கற்பின்றகட்டிக்கரும்பேயுனக்குக்கன்னெஞ்சுதான்
வெற்பின்றவாசனையோவுள்ளவாறுவிளம்பெனக்கே. ௨௨

பேயல்லவோவொருவேளைவாக்துபேசிடுங்கல்
லாயல்லவோகின்மனங்கெட்டியானதுமற்புதந்தான்
நீயல்லவோமதுரேசர்பங்குற்றவனியெனக்குத்
தாயல்லவோபிள்ளைதானல்லவோசிவசமபவியே, ௨௩

பண்டோதரியபறைபாடுங்கூடர்பசுங்கிளியைப்
கண்டோதினேனென்கவலையெல்லாமினிக்காலன்றிண்டு
முண்டோதிவந்திடுமேயோதமமைகோபின்முன்னேதிரியும்
குண்டோதரன்கண்டுகொண்டாற்றுடைதட்டிக்கொள்ளுவனே. (௨௪)

செகதூதாவெனவெனவந்தாதெனளமுதேதென்கைலையெனு
நகத்தார்பணியுங்கயற்கணம்மேநின்னயனத்தினால்
முகத்தான்கருநிறங்கொண்டமையாலும்விளங்குதிரு
மிகத்தாமறைக்கொருவண்டானதுமுத்துமூக்குத்தியே. (௨௫)

செகமதின்மிக்கமதுரையின்மாணிக்கஞ்செட்டியதாய்
முகமதிரத்தினம்விற்றசொக்கேசரைமேவியன்பாய்
சுகமதிதந்தெனையாள்கயர்கண்ணிநின்சுந்தரமா
முகமதியீன்றகதிர்மணியோமுத்துமூக்குத்தியே. (௨௬)

பொன்னேமலையத்துசனகியபுயலீன்றெடுத்த
மின்னேயுனதுதவனத்தையெவணமதியமெனத்
தன்னேயொத்தாலொருதாரகையானதுதான்விரும்பி
முன்னேகிடந்தினம்பார்க்கின்றதோமுத்துமூக்குத்தியே. (௨௭)

வடிகொசெந்தமிழ்க்கூடலில்வாழ்சொக்கர்வந்திதரும்
பிடிகொண்டபிட்டுக்குமண்ணைசுமந்துபெருமநரக்
கொடிகொண்டவெற்றித்துறைப்பாண்டியன்கைக்கொடும்பிரம்பால்
அடிகொண்டபோதிலடியாரவர்பொன்னடிகொண்டதே. (௨௮)

அக்குவடம்புனையானந்தவெள்ளத்தையங்கயற்கண்
பக்கத்திருந்தபவளாசலத்தைப்பழம்பொருளை
முக்கட்கனியைக்கடம்பாடவிக்கண்முளைத்தெழுந்த
கொக்கைக்கண்டாலன்றித்தீராதுநெஞ்சிற்றுயரங்களே. (௨௯)

பொன்போலும்பிராட்டியைச்சேவிக்கப்போம்பொழுதில்
என்பால்வரவுமெதிர்நின்றுபேசவுமென்றலைமேல்
தன்பாதஞ்சூட்டவுங்கேட்டதெல்லாந்தந்தருவுமே
அன்பாகவந்திடுமாள்கலிகாலமென்றட்சுவளே. (௩௰)

உரையேனும்பேரையுணரேன்சீரையுனக்கருதிக்
கரையேனெவ்வாறுகடப்பேன்வினையைகடந்தகுண
வரையேயருட்பெருவாரிதியேமதுராபுரிக்குத்
துரையேயழகியசொக்கேசதமிழ்தந்தசுந்தரமே. (௩௧)

மூக்கட்பாரபனைசொக்கப்பிரானெனுமுன்னவனோ
டொக்கச்சிவந்தகயற்கண்ணிலங்கிதியுற்றுமிகச்
செக்கச்சிவந்தபொற்றாமரைப்பாததெரிசனைக்கே
பக்கத்தடுத்தவாசொக்கத்தினையெட்டிப்பார்ப்பவரே. ௩௨

மட்டார்குழலங்கயற்கண்ணம்மையிம்மட்டென்றுதொகைக்
கெட்டாதனதுதுயர்நின்பாற்சொல்லியேசலிக்க
ஒட்டாரநீசெய்யலாகாதுபாருன்னடிமைதன்னை
நட்டாற்றிற்கைவிட்டிடாதேபழிவெகுநாணிற்குமே. ௩௩

விரித்தான்சடையைமகாமேருவாசுகிவில்லைவிட்டுச்
சிரித்தான்புரத்தையெரித்தான்பாகுருதேசிகன்முன்
உரித்தான்கரியையுடுத்தான்கிரண்டத்துள்ளுலகும்
பரித்தான்மதுரைதரித்தான்சவுந்தரபாண்டியனே. ௩௪

மைக்காற்குழல்பெண்வடிவாளைத்தென்னவன்மாமகளை
அக்காளையோன்பங்கிலாத்தாளைமாறங்கையானவளைத்
திக்கார்தொழுங்கயற்கண்ணாளையோர்தினஞ்சேவைசெய்தால்
எக்காலமுமவர்சொர்க்காதிபோகத்திருப்பவரே. ௩௫

வண்டிட்டகூந்தலும்வாரிட்டகொங்கைவளைகளுங்கற்
கண்டிட்டசொல்லுங்கயற்கண்ணியபாகமுங்கைதொழுதேன்
தண்டிட்டடிக்குமறலிவந்தாற்சன்னையிட்டுநகைந்
துண்டிட்டுவாசிறுபிள்ளாயென்றூருக்கனுப்பவனே. ௩௬

பொன்னேபொருந்தற்புதமேபொலிந்தமென்பூந்திருவே
தென்னேசிறந்தசெந்தேனேதிருந்தருட்சின்மயமே
அன்னேயமுதேயருளேயமரர்க்கரும்பொருளே
மின்னேவியன்சுடரேமதுராபுரிமீனம்மையே. ௩௭

கேட்டதுமில்லைகொடுப்பாருமில்லைதிரத்துழவில்
பூட்டாருமில்லையிதெல்லாமெம்பாலில்லைபூரணவரங்
கேட்டேனதற்குப்பறிதில்லையேயினிக்கேட்கவுநான்
மாட்டேனுன்மேற்பழிபோட்டேன்மதுரைமனோன்மணியே. ௩௮

உள்ளக்கவலையெலாம்விள்ளும்போதுனதுமனம்
எள்ளத்தனையிரங்காதிருந்தாயெளியேனினிமேல்
தள்ளப்புரத்தினிலென்றாலும்போவதுதானிலைப்பொன்
வள்ளத்தமுதுண்ணுங்கிளனாய்கடம்பவனவல்லியே. ௩௯

எப்படியெப்படிச்சொன்னானுங்காணிரங்கேனெனவே
அப்படியப்படிநீயிருக்கின்றவதிசயத்தை
இப்படியிப்படியென்றுகிலுமெனக்கேதெரியச்
செப்படிசெப்படியம்மாமதுரைச்சிவானந்தியே. சய

செப்பத்திலுன்னைத்தொழுவாயிரங்கண்ணுஞ்செல்லுபொல்லேன்
தப்பத்தவறத்தொழுதாலுஞ்சொக்கர்தடம்புயத்துக்
கொப்பத்திரண்டகொங்காயுன்னவயவமொன்றுக்கொன்று
முப்பத்திரண்டுகண்வேண்டுகண்டாயென்முகத்தினுக்கே. சக

